# நிகவெரட்டிய பிரதேச சபை

## குருநாகல் மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மே 17 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 25 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடபட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிகவெரட்டிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் இலங்கை பொதுத்தறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

-----------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய சம்பள மீளளிப்புப் பெறுமதி ரூபா 4,924,339 தொகையாகக் காணப்பட்ட போதிலும், நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 4,602,213 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் மற்றும் வருமான கடன்பட்டோர் ரூபா 322,126 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 7,543,251 தொகையாகக் காணப்பட்ட போதிலும் வருமானச் செலவுக் கணக்கில் அவை ரூபா 6,935,139 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் ரூபா 608,112 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மோட்டார் கிரேடர் இயந்திரத்தின் ஒரு பகுதியில் சேதமடைந்தது தொடர்பாக கிடைத்திருந்த காப்புறுதி நட்டஈடு ரூபா 152,903 தொகையினை பலவின வருமானம் (3/61) என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் அத் தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்கள் தொடர்பாக பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 1,334,084 அதனை கடன்பட்டோர் என கணக்கீடு செய்யப்படாமையால் ஆண்டிற்கான வருமானம் மற்றும் கடன்பட்டோர் அத் தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டு தொடர்பாக பெறவேண்டிய வாடகை ரூபா 369,031 இற்கான குத்தகை வருமானம் பெறவேண்டிய வருமானம் ஒன்று என இனங்கண்டு கணக்கீடு செய்யப்படாமையால் ஆண்டிற்கான வருமானம் மற்றும் வருமானக் கடன்பட்டோர் அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) 2009 மற்றும் 2012 ஆண்டுகளின் போது முற்கொடுப்பனவு முறைப்படி (கீமணி) கேள்வி கோரப்பட்டிருந்த பஸ் நிலைய 18 கடைகள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 5,611,440 தொகையினை கடன்பட்டோர் என கணக்கீடு செய்திருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான இறுதி மீதியின் கீழ் 06 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்குகளின் பிரகாரம் மற்றும் குறிப்பிட்ட பதிவேடுகள் இடையே ரூபா 1,012,024 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டது.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பெற வேண்டிய கணக்குகளில் ரூபா 10,657,404 இற்காக முத்திரை கட்டண மீதியொன்று 2011 முதல் 2013 ஆண்டு வரை கிடைக்க வேண்டிய ரூபா 7,570,789 இற்கான நிர்மாண வேலை கடன் பட்டோர் மீதியொன்றும் காணப்பட்டது.

(ஆ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 63,304,821 தொகையாகும். அவற்றில் உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 3,018,916 இற்கான மீதியொன்றும், ரூபா 2,800,140 இற்கு முற்கொடுப்பனவு (கீமணி) மீதி ஒன்றும், மற்றும் 2010 முதல் 2013 ஆண்டு வரையான காலப் பகுதிக்கான செலுத்தப்பட வேண்டிய ரூபா 8,492,684 இற்கான நிர்மான வேலை கடன் கொடுத்தோர் மீதி ஒன்றும் காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டு இறுதியளவில் 02 முதல் 10 வருடங்களுக்கிடையே காலம் முதல் காணப்படும் ரூபா 828,989 இற்கான இறைச்சிக் கடை, மீன் கடை சுமார் 90 வைப்பு மீதிகள் காணப்பட்டதுடன் அதனை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 2,474,870 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக விரிவான பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

02. நிதி மீளாய்வு

----------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் செயற்பாட்டு மிகை ரூபா 3,601,130 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 9,170,998 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 5,569,868 இற்கான வீழ்ச்சியொன்று காணப்பட்டது. இந்த செயற்பாட்டு விளைவிற்கு ரூபா 26,225,973 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 19,917,450 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 9,909,653 இற்கான மிகையாகியுள்ளது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிச் செயலாற்றுகை

------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமாகிய ரூபா 57,438,412 தொகையில் மொத்தமாக நூற்றிற்கு 71 தொகை என ரூபா 40,833,173 தொகையும் சபையினால் உருவாக்கிய வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற படிகள் தன்மையுள்ள பெறுவனவுகளினால் அடங்கியுள்ளது. மூலதன வருமானமாகிய ரூபா 26,225,973 இற்கான மொத்தத் தொகையும் கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களினால் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்கு கிடைக்கப்பெற்ற பணத்தினை அடக்கியுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவு ஆகிய ரூபா 53,837,282 தொகையில் மொத்தமாக நூற்றிற்கு 57 என ரூபா 30,627,606 தொகை தனிப்பட்ட சம்பளங்களுக்கான செலவுகளாகக் காணப்பட்டதுடன் அவற்றில் மொத்தமாக நூற்றிற்கு 82 என ரூபா 25,294,970 இற்கான சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி ஆணையாளரினால் வழங்கப்பட்டிருந்தது. அப் பெறுமதி ஏனைய வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதே போல் மூலதன செலவு ஆகிய ரூபா 19,917,450 தொகையில் மொத்தமாக சுமார் நூற்றிற்கு 59 என ரூபா 11,763,600 யும் மாகாண குறிப்பிட்ட, வீட்டுக்கு வீடு போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவன ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகளுக்காக கிடைத்த பணமாகும்.

2.3 வருமாக நிருவாகம்

---------------------------------

2.3.1 வீத வரி

---------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 1,571,604 இற்கான வீதவரி நிலுவை ஒன்று காணப்பட்டதுடன் அவை வருடாந்த பில்போடப்பட்டவைகளில் சுமார் நூற்றிற்கு சுமார் 63 ஆகும். அதே போல் சபைக்குச் சொந்தமான வீதவரி அலகுகள் 1964 காணப்பட்டதுடன் 2014 ஆண்டின் போது சுமார் 271 அலகுகளுக்கு நிலுவை அறிவித்தல் வழங்கப்பட்டு அவற்றில் 88 அலகுகளுக்கு மாத்திரம் சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது.

2.3.2 வாடகை

---------------

குறைந்த விலை கூறல் ரூபா 239,400 இற்கான 02 இறைச்சிக் கடைகள் மற்றும் 02 மீன் கடைகள் மீளாய்வாண்டின் போது வாடகைக்கு கொடுப்பதற்கு முடியாதிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 04 சொத்துக்கள் தொடர்பாக ரூபா 575,416 இற்கான நிலுவை மீதி ஒன்றும் காணப்பட்டது. அதே போல் 2014 ஆண்டின் போது வாடகைக்கு கொடுத்திருந்த 02 சொத்துக்களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 5,460 இற்கான தாமதக் கட்டணத்தையும் அறவீடு செய்திருக்கவில்லை.

2.3.3 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 1,334,084 தொகையும் முத்திரைக் கட்டணம் ரூபா 10,657,404 வும் காணப்பட்டது.

2.3.4 முற்கொடுப்பனவுப் பணம்

-----------------------------------------

பஸ் நிலையக் கடைகளின் ஒரே தடவையில் செலுத்தும் பண அடிப்படையில் வழங்கியது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பஸ் நிலையத்தின் கீழ் மாடியில் 18 கடைகளின் குறைந்த விலை கூறல்களின் கூட்டுத்தொகை ரூபா 9,562,000 தொகைக்கு 2009 ஆண்டின் போது கேள்வி வழங்கப்பட்டிருந்த போதும் அவற்றில் குறைந்த விலை கூறல் கூட்டுத்தொகை ரூபா 8,850,000 இற்கான 17 கடைகளுக்காக கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. கேள்விகள் ஏற்றுக் கொண்டதற்கான அறிவித்தல் கடிதத்தின் பிரகாரம் கேள்வி தொகையில் நூற்றிற்கு 40 தொகையினை பணமாகச் செலுத்தி மீதியின் நூற்றிற்கு 60 இனை 05 மாதத்தில் செலுத்தி முடிக்க வேண்டும் என அறிவித்திருந்த போதிலும், இது தொடர்பாக குறிப்பிட்ட சாராருடன் எழுத்துமூல உடன்படிக்கை ஒன்று மேற்கொண்டுள்ளதற்கான சான்றுகள் காணப்படவில்லை.

(ஆ) 2009.07.27 திகதி வாடகையாளருடன் இணங்கிய கடிதத்தின் பிரகாரம் ரூபா 1,923,000 கேள்வி வழங்கப்பட்ட இலக்கம் 03, 06 மற்றும் 15 ஆம் இலக்க கடைகள் தொடர்பாக பணம் ஏதும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) கேள்வி நிபந்தனைகளின் பிரகாரம் குறிப்பிட்ட ஒரே தடவையில் செலுத்தும் பணம் (கீமணி) 05 மாதங்களில் செலுத்தி முடிக்க வேண்டும் என இருந்த போதிலும் கேள்வி வழங்கப்பட்டு 05 வருடங்களை மிகைத்த காலம் கடந்திருந்த போதிலும் 2014 திசெம்பர் 31 திகதி வரையும் 1,7,8,10,11,12,14,16,17 இலக்க கடைகள் தொடர்பாக ரூபா 1,417,690 இற்கான ஒரே முறையில் செலுத்தும் பணம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

(ஈ) பஸ் நிலையத்தில் மேல் மாடியில் 12 கடைகள் 2009 ஆண்டின் போது கேள்வி வழங்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் ஒரு கடையேனும் வாடகைக்கு எடுத்திருக்கவில்லை. 2012 ஜூலை மாதத்தில் இந்தக் கடைகளை வாடகைக்கு கொடுப்பதற்காகக் குறைந்த விலை கூறல் ரூபா 7,000,000 தொகைக்கு மீண்டும் கேள்வி கோரப்பட்டிருந்தது. கேள்வி நிபந்தனைகளின் பிரகாரம் கேள்வித் தொகையில் நூற்றிற்கு 50 தொகையினை 21 நாட்களிலும் மீதித் தொகையை 90 நாட்களிலும் செலுத்தி முடிவாக்க வேண்டும். எனினும், கேள்வி வழங்கப்பட்டு 02 வருடங்களை

மிகைத்த கடந்திருந்த போதிலும் 2014 திசெம்பர் 31 திகதி வரையும் 06 கடைகள் தொடர்பாக ரூபா 2,270,750 இற்கான ஒரே தடவையில் செலுத்தும் பணம் அறவிடப்பட வேண்டியிருந்தது.

03. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

3.1 முறை சாராக் கொடுக்கல் வாங்கல்கள்

------------------------------------------------------------------

(அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவையில் 2.14.1 வழிகாட்டலுக்கு மாற்றமாக 03 கூறுவிலைகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு 2014 ஆண்டின் போது 03 சந்தர்ப்பங்களில் ரூபா 692,790 இற்கான மின்சார உபகரணங்கள் பெறப்பட்டிருந்தது.

(ஆ) 2014 ஆகஸ்ட் முதல் திசெம்பர் வரை சபையின் மோட்டார் கிரேட்டர் மற்றும் வெளியில் இருந்து பெற்றிருந்த 10 மோட்டார் கிரேட்டர்கள் ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை நிகழ்ச்சித் திட்டத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், எரிபொருள் பதிவேட்டின் பிரகாரம் மோட்டார் கிரேட்டர் இயந்திரத்திற்காக சபையினால் எரிபொருள் 18,838 லீட்டர்கள் வழங்கியிருந்த போதிலும், அவ் இயந்திரங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த வேலையின் அளவு தொடர்பாக போதியளவு தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையால் சபையின் எரிபொருளுக்காக செலவிடப்பட்ட ரூபா 2,200,000 விட மிகையான தொகை தொடர்பாக போதியளவு உறுதிப்படுத்தல்கள் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

3.2 ஒப்பந்த நிருவாகம்

--------------------------------

3.2.1 வீட்டிற்கு வீடு – கிராமத்திற்கு கிராமம் 2014 நிகழ்ச்சித் திட்டம்

----------------------------------------------------------------------------------------------------------

வீட்டிற்கு வீடு - கிராமத்திற்கு கிராமம் நிகழ்ச்சித் திட்டம் 2014 இன் கீழ் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பாதை அபிவிருத்தி செய்வதற்காக 36 பாதைகளுக்காக ரூபா 15,000,000 தொகையொன்று ஒதுக்கப்பட்டிருந்தது.

(i) கணக்காய்வுத் திகதியாகிய 2015 மார்ச் 20 திகதி வரை ஏற்பாட்டுத் தொகையில் சுமார் நூற்றிற்கு 27 ஆகிய ரூபா 4,050,000 பெறுமதியான 08 நிர்மாண வேலைகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதே போல் ஏற்பாட்டுத் தொகையில் சுமார் நூற்றிற்கு 15 ஆகிய 04 நிர்மாண வேலைகளில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் ஏற்பாட்டுத் தொகையில் சுமார் நூற்றிற்கு 58 ஆகிய ரூபா 8,750,000 பெறுமதியான 24 நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) ரூபா 1,000,000 இற்கான ஏற்பாடுகளின் மீது பண்டாரநாயக்க மாவத்தை அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலைக்காக விவசாய அமைப்பு ஒன்றுடன் 2014 திசெம்பர் 21 திகதி உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 29 ஆந் திகதி முதலாவது மற்றும் இரண்டாவது வேலைப் பகுதிகள் கொடுப்பனவு அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பின்னர் முன்னேற்றமொன்று காணக் கூடியதாக இருக்கவில்லை. 2015 மார்ச் 21 அளவில் உடன்படிக்கைக் காலம் முடிவடைந்திருந்த போதிலும் குறிப்பிட்ட பாதையின் வேலை பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை எனவும் ABC கலவை பரப்புதல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததெனவும் 2015

மார்ச் 20 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

3.2.2 ஒரு ஊருக்கு ஒரு வேலை நிகழச்சித் திட்டம் - 2014

-------------------------------------------------------------------------------------------

கோடவெஹர, நிகவெரட்டிய மற்றும் ரஸ்நாயகபுர பிரதேச செயலாளர் வட்டாரங்களுக்காக ரூபா 47,123,500 தொகையொன்று ஒரு ஊருக்கு ஒரு வேலை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்தது.

ஒவ்வொரு பிரதேச செயலாளர் வட்டாரத்திலும் 78 கிராம அலுவலர் பிரிவு தொடர்பாக 727 பாதைகள் மோட்டார் கிரேட்டர் பண்ணுவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டு ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுக்காக பணம் ஒதுக்கப்பட்டிருந்தது. அவற்றிற்கான நிர்மாண வேலை கோவைகள் உரிய முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை. அத்துடன் பூர்த்தி செய்யப்பட்ட வேலையின் அளவு, பயன்படுத்திய மோட்டார் கிரேட்டர் மணித்தியாலங்கள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பாக தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

04. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) ஒப்பந்த நிருவாகம்